செ.வெ.எண்:368/2009(செமதொஅ) நாள். 30.10.2009

**சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், சோத்துப்பாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற மனுநீதி திட்ட முகாமில் ரூ.26 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.**

காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், சித்தாமூர் ஊராட்சி ஒன்றியம், சோத்துப்பாக்கம் ஊராட்சியில் உள்ள எஸ்.இ.ஆர். திருமண மஹாலில் மனுநீதி திட்ட முகாம் நடைபெற்றது. மனுநீதி திட்ட முகாமில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.இரா.ஆனந்தகுமார் இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நம்பிரசான், அச்சரப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.சங்கரி நாராயணன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி, வருவாய் கோட்ட அலுவலர், வட்டாட்சியர்கள், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மனுநீதி திட்ட முகாமில் சித்தாமூர் மற்றும் அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சி மன்றத்தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் தங்கள் ஊராட்சியில் குடிநீர் வசதி, இலவச வீட்டுமனைப்பட்டா, ஏரி மதகு பழுதுபார்த்தல், பேருந்து வசதி, சாலை வசதி, மின்சார வசதி, முதியோர் உதவித்தொகை போன்ற கோரிக்கை மனுக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அளித்தார்கள். அதனை தொடர்ந்து பொதுமக்களிடம் 500க்கு மேற்பட்ட கோரிக்கை மனுக்களை பெற்ற மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் அவற்றை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பி உடனடி நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

ஏற்கனவே பெறப்பட்ட மனுக்களின் மீது நடவடிக்கை மேற்கொண்டு 130 நபர்களுக்கு ரூ.3.20 இலட்சம் மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்களையும், நலிந்தோர் நிவாரணமாக 5 நபர்களுக்கு ரூ.10 ஆயிரம் வீதம் ரூ.50 ஆயிரமும், விதவை உதவித் தொகை 106 நபர்களுக்கு ரூ.400 வீதமும், ஆதரவற்றோர் விவசாயி கூலி உதவித்தொகையாக 18 நபர்களுக்கு ரூ.400 வீதமும், ஊனமுற்றோர் உதவித் தொகை 24 நபர்களுக்கு ரூ.400 வீதமும், ரூ.2000 மதிப்பிலான சலவைப் பெட்டி 16 நபர்களுக்கும், ரூ.2500 மதிப்பிலான தையல் இயந்திரம் 21 நபர்களுக்கும், இறந்த அரசு ஊழியரின் குடும்பத்திற்கு குடும்பநல நிதியாக ரூ.1.45 இலட்சமும், முழுசுகாதார திட்டத்தின் கீழ் தனிநபர் கழிப்பறை கட்டுவதற்காக 344 நபர்களுக்கு ரூ.19.40 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.26 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசியதாவது,

ஊராட்சி மன்றத்தலைவர்கள் தங்கள் ஊராட்சியில் குடிநீர், சாலை வசதி, போக்குவரத்து வசதி, இலவச வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை போன்றவற்றை வழங்க கோரி மனுக்களை அளித்துள்ளார்கள். குடிநீர் பிரச்சனை மிக முக்கியமான பிரச்சனை ஆகும். எனவே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் நாளை முதல் குடிநீர் பிரச்சனைக்குரிய ஊராட்சிகளுக்கு சென்று, அவர்களுக்கு தேவையான குடிநீர் வழங்க மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், திறந்தவெளி கிணறு, ஆழ்துளை கிணறு போன்றவைகளை பார்வையிட்டு குடிநீர் பிரச்சனை தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பள்ளிக்கு மாணவ செல்வங்கள் செல்கின்ற வகையில் பேருந்து வசதியினை போக்குவரத்துத்துறையினர் ஏற்படுத்தி தரவேண்டும். எந்தெந்த பகுதிக்கு புதிய பேருந்துகள் இயக்கப்பட வேண்டும் என்பதை ஆய்வு செய்து, அது சம்பந்தமான விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தால் அதன்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நமது மாவட்டத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா முறையாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த பகுதி மக்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க வருவாய் கோட்ட அலுவலர், வட்டாட்சியர்கள் முறையாக கொடுக்க வேண்டிய பட்டாக்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஏழை-எளிய மக்களுக்கு வழங்க வேண்டிய முதியோர் உதவித் தொகையினை முறையாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மின்சாரப் பிரச்சனை இந்த பகுதியில் உள்ளது. எனவே, மின்துறை அதிகாரிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று நேரடியாக ஆய்வு செய்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மின்துறைக்கு முறையாக பணம் கட்டியிருந்தால் மின்சார கம்பங்களை உடனடியாக மாற்றித்தரவும் நடடிவக்கை மேற்கொள்ள வேண்டும்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஏரிகள் நிறைந்த மாவட்டம் ஆகும். எனவே, மழை காலங்களில் நீரினை சேமித்து நீராதாரத்தினை பெருக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பொதுப்பணித்துறையை சார்ந்த அதிகாரிகள் அனைத்து ஏரிகளுக்கு சென்று பழுதடைந்த ஏரி மதகுகளை சரிசெய்யவும், ஏரி கரையினை பலப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பொதுமக்கள் மற்றும் ஊராட்சி மன்றத்தலைவர்கள் அளித்துள்ள கோரிக்கை மனுக்களின் மீது அரசுத்துறை அதிகாரிகள் அவற்றை ஆய்வு செய்து உடனடி நடவடிக்கை எடுத்திட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் பேசும்போது, ஒவ்வொரு தொகுதியாக சென்று மனுநீதி திட்டம் முகாம் நடத்தி பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று அவர்களின் குறைகளை தீர்க்க அரசு பாடுபாட்டு வருகிறது. இந்த மனுநீதி முகாமில் ஏராளமான பொதுமக்களும், ஊராட்சி மன்றத்தலைவர்களும் பல்வேறு கோரிக்கை மனுக்கள் அளித்துள்ளார்கள். அந்த மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும். பெறப்பட்ட அனைத்து மனுக்களும் கணினியில் பதிவு செய்து நிறைவேற்றக் கூடிய மனுக்களின் மீது நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும், வழங்க இயலாத மனுக்கள் மீது அதற்கான காரணத்தை விளக்கி சம்பந்தப்பட்ட மனுதார்களுக்கு அளித்திட வேண்டும் என அனைத்துத்துறை அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

முடிவில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (மக்கள் குறைதீர்க்கும் பிரிவு) திரு.முனுசாமி அவர்கள் நன்றி கூறினார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்